Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.295 /2019 Date:21.05.2026
Deposition of witness for prosecution: PW4 ( LW5)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | பேச்சியம்மாள் | Village | கம்பம் |
| Father/ Husband Name | ராஜா | Taluk | உத்தமபாளையம் |
| Age | 40 /26 | Calling | கூலி |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 21.05.2026 TIME 11.50 AM

1–வது எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

புகார் அளித்த அசா.1 ஐ தெரியாது. 1–வது எதிரி எனக்கு தம்பி என்ற முறையில் உறவினர் ஆவார். இவ்வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள், ஆனால் வழக்கு விபரங்கள் தெரியாது என சொன்னேன்.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1–வது எதிரி மற்றும் அ.சா.3–ம் ஆகியோருக்களுக்கிடையே திருமணம் ஆன நாள் முதல் எனக்கு தெரியும் என்றும், இருவரும் 1–வது எதிரியின் வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள் என்றும், பின்னர் அடிக்கடி அவர்களுக்கிடைய அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டது என்றும், திருமணமாகி 4 மாதங்களில் அ.சா.3 ன் கொழுந்தனாருக்கு, VAO வேலை வாங்க வேண்டும் என்று அ.சா.3 ன் நகைகளை எதிரியின் குடும்பத்தினர்கள் கேட்டார்கள் என்றும், அ.சா.3 கொடுக்க மறுக்கவே அப்போது இருந்தே அசா.3–உடன் எதிரிகள் சண்டை சச்சரவில் ஈடுபட்டார்கள் என்றும், ஒரு கட்டத்தில் பிரச்சனை அதிகமாகவே அ.சா.3 மருந்தை குடித்தார் என்றும், பின்பு சிகிச்சைக்காக உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றும், மேல்சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், சிகிச்சையில் இருந்த அ.சா.3 யை எதிரிகள் பார்க்கவில்லை என்றும், அ.சா.3 ன் சிகிச்சை செலவுக்காக போன் மூலம் கேட்ட போது அதனை தர எதிரிகள் மறுத்துவிட்டார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
SD/P.Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.